தொகுதி 8] [பகுதி 3

# பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சுபானு ௵ ஆனி ௴

JUNE 1943

பிரசுர கர்த்தர்கள் :

**தென் இந்திய ஆசிரியர் சங்கம்**

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பாலர்களுக்கான சாஸனம் .... .... .... | 327 |
| 2. | பாடக் குறிப்பு எழுதுவதின் அவசியமும் முறையும் .... —S. ராமஸ்வாமி அய்யங்கார். | 332 |
| 3. | 33-வது மாகாணக் கல்வி மகாநாடு, வேலூர் .... | 336 |
| 4. | செய்தித் திரட்டு .... .... .... | 338 |
| 5. | பத்திராதிபர் குறிப்பு .... .... .... | 341 |


## சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைப் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினால் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1943 ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 4, 44.
செங்கற்பட்டு — Ch. 17, 30, 32B, 34.
வட ஆற்காடு — NA. 2, 15, 17, 22, 24, 26, 49, 58.
தென்னாற்காடு — SA. 19, 27, 28.
சித்தூர் — CT. 9/18.
தஞ்சாவூர் — Tan. 18, 27A, 33, 43, 51, 67, 91.
திருச்சி — Tri. 14, 19, 29, 52.
ராமனாதபுரம் — Rd. 3, 24, 57, 67, 68.
மதுரை — Md. 1, 27, 131.
திருநெல்வேலி — Tin. 35, 49.
சேலம் — S. 32, 50, 59.
கோயமுத்தூர் — Co. 24, 26A, 48, 49.

**குறிப்பு** :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும் மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும்.

—பத்திராதிபர்

# பாலர் கல்வி

| தொகுதி 8 | 1943 ௵ ஜூன் ௴<br>ஸுபாநு ௵ ஆனி ௴ | பகுதி 3 |
| --- | --- | --- |


## பாலர்களுக்கான சாஸனம்

---

[நேச நாடுகளின் பிரதிநிதிகள் லண்டன் மகா நகரில்கூடி, பாலர்களுக்கான சாஸனத்தைத் தயாரித்துள்ளார்கள். இச் சாஸனத்தில் கண்ட ஆறு அம்சங்களும், அவைகளை விளக்கும் குறிப்புகளும் இங்கிலாந்திலுள்ள **(New Education Fellowship)** புதுக் கல்விச் சங்கத்தாரின் **(New Era)** என்னும் பத்திரிகையின் மார்ச்சு வெளியீட்டில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அக்குறிப்புகளின் சாராம்சத்தை இங்கு வெளியிட்டிருக்கிறோம்—பத்திராதிபர்.]

சுயேச்சையை விரும்பும் ஜன சமுதாயங்கள் நிலைத்து நிற்குமா என்னும் கேள்விக்கு இம்மகா யுத்தம் சரியான விடை அளிக்கும். வெற்றி யடைவது, போர்க்களத்தில் மாத்திரம் அல்ல; மனிதர்களின் இருதயத்திலும் மனதிலுமே வெற்றி யுண்டாகவேண்டும். நமது எண்ணங்கள், வேகங்கள், உணர்ச்சிகள், கொள்கைகள் இவைகளிலேயே நமக்கும் நமது பாலர்களுக்குமான வெற்றியை அடையவேண்டும். ‘ஹிட்லரிஸ்ம்’ என்பது ஒரு கொடிய விஷநோய். ஆக்கிரமிப்பு, அநியாயம் இவைகள் நமக்கு பழக்கமாய் விட்டன. நியாயத்திலும் சட்டத்திலும் நமக்குள்ள நம்பிக்கை கலங்கிவிட்டன. எனவே, இப்பொழுதுள்ள பாலர்கள் வசிக்கவேண்டிய புதிய உலகத்திற்கேற்ற அஸ்திவாரம் போடுவது நமது கடமையாகும்.

இவைகளை யெல்லாம் நாம் நன்கு அறிந்திருப்பதால்தான், இம்மகா யுத்தத்தின் விளைவினால் உலகமே திகைத்துள்ள இக்காலத்தில் பாலர்களுக்கான இச்சாஸனத்தைத் தயாரிக்க வேண்டி வருகிறது. இவ் யுத்தத்தினால் ஏற்படக்கூடிய கோர சம்பவங்கள், அழிவுகள் முதலியனவின் கற்பனைகளை நாம் இழந்துவிடாமல் இருக்கவேண்டும். புது சமுதாயம் இப்பொழுதுள்ளதைக் காட்டிலும் அதிகக் கல்வித் தேர்ச்சி

யும், அதிக உபகரணங்களேயும் கொள்ளாவிட்டால், இக்கற்பனைகளைக் கட்டாயம் இழந்துவிட வேண்டியிருக்கும். எனவே, நமக்கு பிற்காலத்தில் வாழ்வோர்கள் நாம் செய்த, செய்யும், தவறுகளைச் செய்யாமலிருக்கும்படியும், ஜனநாயக வாழ்க்கை முறையில் தீவிர நம்பிக்கையைக் கொள்ளுமாறும் செய்வது நமது கடமையாகும். பிற்காலத்தில் நமக்குள்ள முழு நம்பிக்கையை, இக்கீழ்க்கண்ட கொள்கைகளில் விஸ்தரிக்க, முன்பட்டு, மற்றவர்கள், புதிய சகாப்தத்துக்கேற்ற பாலர்களைத் தேர்ச்சி செய்ய முன்வருவார்கள் என்று நம்புகிறோம்.

I. பாலரின் தன்மை (**Personality**) தெய்வீகமானது. பாலர்களின் தேவையே கல்வி திட்டத்திற்குரிய அஸ்திவாரம்.

II. பாலர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையான, சரியான உணவு, போதுமான ஆடை, சௌகரியமான தங்குமிடம் இவைகளே சமுதாயத்தின் முதல் செலவு திட்டமாக இருக்கவேண்டும்.

III. பாலர்கள் ஒவ்வொருவருக்கும், தேவையான வைத்திய சோதனையும் சிகிச்சை வசதிகளும் எப்பொழுதும் கிடைக்கும்படி இருக்கவேண்டும்.

IV. ஜன சமுதாயத்தில் கிடைக்கக்கூடிய அறிவு வளர்ச்சியும், புத்தி புகட்டலும் பாலர்கள் எல்லோருக்கும் வித்தியாசமின்றி அளிக்கப்பட வேண்டும்.

V. பாலர்கள் ஒவ்வொருவருக்கும், பள்ளிக்கூட முழுப்படிப்பு அளிக்கப்படவேண்டும்.

VI. பாலர்கள் எல்லோருக்கும் மதக் கல்விப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

**I. பாலரின் தன்மை தெய்வீகமானது. பாலர்களின் தேவையே கல்வி திட்டத்திற்குரிய அஸ்திவாரம்.**

ஜனநாயக வாழ்க்கையின் முக்கிய சாதனம், ஒவ்வொருவனின் தன்மை, உயர்த்தப்படவும் விசாலிக்கப்படுமாறும் எல்லோரும் ஒன்று கூடி சச்சரவு இல்லாமல், அன்புடன் வாழ்வதும் வேலை செய்வதுமாகும். இக் கொள்கையை மேற்கொண்ட ஒரு சமுதாயம், இதை எல்லாத் துறையிலும், அதிலும் முக்கியமாகக் கல்வித் துறையில் விருத்திசெய்ய முயற்சிக்கவேண்டும்.

வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் சம்பாதித்தலுக்குத் தேவையான தேர்ச்சி ஒவ்வொரு குழந்தையும் பெற்று, சமுதாயத்துக்கு சேவை செய்யவேண்டுமென்று பலர் சொல்லுகிறார்கள். இதை ஒப்புக்கொள்ள வேண்டியதுதான் என்ற போதிலும், கல்வியின் முக்கிய நோக்கம், மனிதர்கள் உண்டாக்குவதே யொழிய, மனிதக் கருவிகள் உண்டாக்குவ

தல்ல என்பதை ஒரு காலமும் மறக்கக்கூடாது. தொழிற் கல்வி, எவ்வளவு அவசியமானபோதிலும், தொழிற் கல்வி மாத்திரம் போதாது.

'பாலர்களின் தேவை' என்பதிலிருந்து, பாலர்களின் தேவையைத் தவிர அரசாங்கமோ அல்லது ஜனசமூகத்தின் தேவைக்கோ முதன்மை கொடுக்கக்கூடாது. நமது முக்கிய நோக்கம், தேகவன்மை, பலம், சுறுசுறுப்பான தைரியம் தன்னந்தனியாக யோசனை செய்யவும், செய்கைகள் செய்யும் சக்திவாய்ந்த மனிதன், உற்பத்தி செய்யும் வன்மையும், மனிதவர்க்கத்தின் முன்னேற்றத்துக்காக பாடுபடக்கூடிய வீரனை உண்டாக்குவதாகும்.

II. பாலர்கள் ஒவ்வொருவருக்கும் உரிமையான சரியான உணவு, போதுமான ஆடை, சௌகரியமான தங்குமிடம் இவைகளே சமுதாயத்தின் முதல் செலவு திட்டமாக வேண்டும்.

குழந்தைகளுக்கு தங்களுடைய சக்திகள் சரிவர பூர்ணமாக வளர்ச்சியடைவதற்கு வேண்டிய சாதனங்களை அடைய உரிமையுண்டு. இவ்வுரிமையை ஏற்பது நம்முடைய கடமையாகும், கண்யமானதுமாகும். அதை அங்கீகரிக்காவிடில் ஜனநாயகக் கொள்கையைத் தவிர்ப்பதாகும். பல கடின ப்ரச்னைகள் தீரும்வரையில் காத்திராமல், ஒவ்வொரு நாடும், தன்னுடைய மூலதனத்தின் முதல் செலவாக, அந்நாட்டின் குழந்தைகளுக்கு ஜாதி, மதம், நிறம், வகுப்பு வித்தியாசமில்லாமல் போதுமான உணவு, ஆடை, வசிக்கும் வசதி ஏற்படுத்துவதாகும். வித்தியாசம் காட்டுவதற்கு ஒருவிதத்திலும் காரணம் கூறமுடியாது. ஒரு பிரிவும், மற்றப் பிரிவுகளைக் காட்டிலும் அதிக சலுகை எதிர்பார்க்கக்கூடாது.

நமது முக்கிய நோக்கம், பூர்ணவளர்ச்சிக்கு அடிப்படையான தேகவன்மை பெறுவதாகும். இதை அடைய, ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் தேக ஆரோக்கிய விஷயங்கள் போதிக்கப்பட்டும், முதியோர்களுக்கும் பாலர்களுக்கும் ஆரோக்கியம் பெறவேண்டிய தகுந்த வசதிகள் ஏற்படுத்தவேண்டும்.

III. பாலர்கள் ஒவ்வொருவருக்கும் தேவையான வைத்திய சோதனையும் சிகிச்சை வசதிகளும் எப்பொழுதும் கிடைக்கும்படி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு சமுதாயத்தின் சமூகக் கொள்கை, அச்சமுதாயத்திலுள்ளோர் ஒவ்வொருவரும் ஆரோக்கிய வாழ்க்கைக்கு வேண்டிய சுற்றுப்புறத்தை ஏற்படுத்தித் தருவதாகும். தேக ஆரோக்கியத்திற்கு ஏற்ற சுற்றுப்புற வசதிகள் மாத்திரம் போதாது. பாலர்களின் சேவையில் வைத்திய சாஸ்திரத்தையும் ஈடுபடுத்தவேண்டியது அவசியம்.

ஒவ்வொரு நாட்டிலும், ஆரோக்கிய வாழ்க்கைக்கு ஏற்படுத்தியுள்ள வசதிகள் அந்த நாட்டின் வைத்திய சாஸ்திரிகளுக்கும் மனோதத்துவ சாஸ்திரிகளுக்கும் பூர்ண திருப்தி அளிக்கக்கூடியதாக விருக்க வேண்டும். அதாவது ஒவ்வொரு நாட்டிலும் போதுமான திறமை வாய்ந்த மருத்துவ உதவி, அடிக்கடி ஆரோக்கிய பரிசோதனை, வைத்தியசாலை, வைத்திய நிபுணர்கள், தொத்து வியாதிகளிலிருந்து காப்பாற்றிக்கொள்ளவும் குணமடையவும் வேண்டிய வசதிகள், பாலர்களைப் போஷிக்கும் முறையில் பயிற்சி முதலிய போன்ற பல வசதிகள் எங்கிலும் ஏற்படுத்தவேண்டும். இவையெல்லாம் முடியாததுபோல் காணப்படும். ஆனால் யுத்தத்தில் வெற்றிபெறவேண்டும் என்று எவ்வளவு தீவிரமாக வேலை செய்கிறோமோ அவ்வளவுக்கு இவ்விஷயத்திலும் சிரத்தை எடுத்துக்கொண்டால் அது முடியும். அங்க ஹீனங்கள் கொண்டதும், மனோவலிமை குன்றியுள்ளதுமான பாலர்களுக்கு அவர்கள் பொருளாதார நிலை எப்படி இருந்தபோதிலும், அவர்களுக்கு ஏற்ற கல்வி வசதிகளும், வைத்திய வசதிகளும் அளிப்பது சமுதாயத்தின் கடமையாகும்.

குற்றம் செய்யும் பாலர்கள், சரியான சுற்றுப்புற அமைப்பு இல்லாததால்தான் குற்றங்கள் செய்கின்றார்கள். தங்கள்பேரில் ஒரு தப்பில்லாமலிருக்கையிலேயே அவர்களுக்கும் ஜனசமூகத்துக்கும் முரண் உண்டாய்விடுகிறது. எனவே, அவர்களைத் தண்டிப்பது அவர்களின் சரியான வளர்ச்சியைத் தடைசெய்யும். சமூகத்துக்கே தீமை உண்டாக்கும். குற்றம் செய்யும் பாலர்கள், சமூகத்தால் பகிஷ்கரிக்கப்பட்டவர் அல்ல. அவர்களை ஒழுங்குமுறையில் திருத்துவது, ஜனசமூகத்தின் கடமையாகும்.

## IV. ஜனசமுதாயத்தில் கிடைக்கக்கூடிய அறிவு வளர்ச்சியும் புத்தி புகட்டலும் பாலர்கள் எல்லோருக்கும் வித்தியாசமின்றி அளிக்கப்படவேண்டும்

ஜனநாயகக் கொள்கையைத் தீவிரமாகக் கொண்டோர், விரும்பும் புதிய சமூகத்தில், ஒவ்வொரு மனிதனும் அவனால் கூடிய அளவு பூர்ண வளர்ச்சியைப் பெறவேண்டும்; எந்த வகுப்பிலோ நிலையிலோ பிறந்திருந்தபோதிலும், பிறப்பினால் அல்லாமல் அவன் சக்திக்காக மதிக்கப்படுவான். சமூகத்தின் ஒரு சாராருக்கு மாத்திரம் மேல் படிப்புக்கான வசதிகளும் சலுகைகளும் ஏற்படுத்துவது தவறானதாகும். முன்னேற்றத்திற்கு தேர்ச்சியும் வன்மையுமே தகுந்த காரணமாகவேண்டும். ஸர்வகலாசாலைகள் போன்ற கல்வி ஸ்தாபனங்கள், அரசாங்கத்தினின்று மான்யம் பெற்று வருவதினால், ஒருசாராருக்கு அதிகச்சலுகை காட்டுவது தவறானதாகும். சமூக நியாயத்திற்காக மாத்திரம் இந்த சமத்வத்தை வற்புறுத்தவில்லை. பழைய காலத்தில் நாட்டுக்கு வேண்டிய தொண்டுகளை ஒருசிலர் செய்வதே போதுமானதாயிருந்தது. ஆனால்

தற்கால சமூகங்களோ அப்படி அல்ல. இதன் வேலைகளைச் சரிவர கவனிக்க, பலர் வேண்டியிருக்கின்றது.

**V.** பாலர்கள் ஒவ்வொருவருக்கும் பள்ளிக்கூட முழுப்படிப்பு அளிக்கப் படவேண்டும்.

பாலர்களுக்கு கல்வி, கட்டாயமாகவும் இலவசமானதாகவும் இல்லாவிடில் ஒரு நாடும், அதன் பொதுஜனங்களின் வாழ்க்கையை இன்பு செய்ய முடியாது. தவிர, இந்நவீன உலகத்தில், அந்நாட்டின் நிலை மிகத் தாழ்ந்துவிடும். 18-ம் வயதுவரையில் ஒவ்வொரு பாலனுக்கும் பள்ளிக்கூடப் படிப்புக்கு வேண்டிய வசதிகள் அளிக்கப் படவேண்டும்.

**VI.** பாலர்கள் எல்லோருக்கும் மதக் கல்விப் பயிற்சி அளிக்க வேண்டும்.

நமது கல்வித் திட்டம், வித்தியாசங்களை பொருட்படுத்தாது தாராளப் பான்மையை ஏற்படுத்தவேண்டும். மரியாதையையும் பொறுப்பையும் ஊட்டக்கூடியதா யிருக்கவேண்டும். நாடு, சமூகம், ஜாதி, மதம், முதலிய பிரிவுகளை பொருட்படுத்தாமல் எல்லோரும் ஒன்றுகூடி சகோதரப்பான்மையில் வேலை செய்யவும் வாழவும் வேண்டிய மனப்பான்மையை உண்டாக்கவேண்டும். இப் பயன்கள் மதக்கல்விப் பயிற்சி போதிப்பதனால்தான் ஏற்படும்.


நமது புதிய பிரசுரங்கள்

**பூவர்ணனை** BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T. (Dip. Geo.)

4-ம் வகுப்புக்குரியது விலை அ. 10. 5-ம் வகுப்புக்குரியது விலை அ. 10½.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 13; அணா 15; அணா 15.

**இந்து தேச சரித்திரம்** BY S. திருவேங்கடாச்சாரி, M.A., L.T.,

4-ம் வகுப்புக்குரியது விலை அணா 5. 5-ம் வகுப்புக்குரியது விலை அணா 6.

**அங்க கணிதம்** BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியநாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி S. ராஜமையர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

Book I for Form I 0—12—0; Book II for Form II 0—14—0
Book III for Form III 0—14—0

**P. வரதாச்சாரி அண்டு கம்பெனி**

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை.

# பாடக் குறிப்பு எழுதுவதின் அவசியமும் முறையும்

by

**Mr. S.** ராமஸ்வாமி அய்யங்கார்

*தலைமை ஆசிரியர், போர்டு ஹையர் எலிமெண்டரி பாடசாலை, பென்னகரம்*

'செய்வன திருந்தச் செய்' என்னும் அமுதவாக்கு, மக்கள் தத்தம் கடமைகளை முழு மனதுடன், எத்தகைய குறைபாடுமின்றித் திருத்தமாகச் செய்து முடித்தல் அவசியம் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது. அவ்வாறு செய்து முடிக்க, நாம் செய்யவேண்டிய வேலையைப் பற்றிய முழு விபரத்தையும் நன்குணர்வதுடன் அவ்வேலையைப் பழுதற முடிக்க நம்மை நன்கு தயார்செய்து கொள்ளவும் வேண்டும் என்பது தெளிவு.

'எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு'

என்ற பொய்யாமொழிக் கிணங்க, செய்யவேண்டிய தொழிலை முடிக்கும் உபாயத்தை முன்னதாகவே நன்குணர்ந்து, தொழிலைத் தொடங்க வேண்டும். தொழிலை ஆரம்பித்து விடுவோம்; அதனை முடிக்கும் உபாயத்தைப் பின்னால் ஆராய்வோம். என்ற கொள்கை ஏதந்தரும். மனிதரது பெருமையையும் சிறுமையையும் அறிய உறை கல்லாக அமைவது, அவரவர் எடுத்துக்கொண்ட தொழிலைத் திறம்பட முடிக்கும் திறனோ, அல்லது குறைபட முடிக்கும் செயலோ ஆம்.

வீடுகட்டு மொருவன், தான் கட்டவேண்டிய இடத்தின் விபரம், அங்கு அமைக்கவேண்டிய அறைகள், கூடம், தாழ்வாரம் ஆகியவை பற்றிய விஷயங்களை நன்கு முன்னதாகவே அறிவதோடு, அவ்வேலையைச் செவ்வனே முடிக்கத் தன்னைத் தயார் செய்து கொள்ளவும் வேண்டும். இல்லையேல் வீண் செலவு அதிகமாவதுடன், திருப்திகரமாக வீட்டைக் கட்டி முடிக்கவும் இயலாது போய்விடும்.

வாழ்க்கையில் பின்னால் நேரக்கூடியவைகளை முன்னதாகவே நன்குணர்ந்து அவைகளுக்கேற்ப வாழ்க்கையை நடத்தாதவன், துன்பத்திற்காளாகிறான்.

'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்'

என்னும் வள்ளுவர் வாக்கு இதனை வலியுறுத்தும். எனவே, எத்தொழிலையும் தொடங்குவதற்கு முன், அத்தொழிலை முடிக்கும் உபாயத்தை முன்னதாகவே பழுதற உணர்ந்து, அதன்பயனாய் ஏற்படும்

மனவலிமை கொண்டு தொழிலை நடத்தல் முறைமையாம் என்பது தேற்றம்.

'வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றய வெல்லாம் பிற'

என்ற திருவள்ளுவ நாயனார் திருமொழி, தொழிலை நன்கு முடித்தற்கு மனவலிமை வேண்டும் என்பதனைக் காட்டுகின்றது. அம்மனவலிமை, நாம் எடுத்துக் கொள்ளும் தொழிலைப்பற்றிய முழு விபரத்தையும், அதனை முடிக்கும் உபாயத்தையும் முன்னதாகவே நன்குணர்ந்து கொள்வதா லமையும்.

எனவே எல்லாத் தொழில்களிலும் மேம்பட்டதாகிய ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டோ ரனைவரும், வகுப்பறைக்குச் செல்வதற்குமுன், அன்று நடத்தவேண்டிய பாடத்தைப்பற்றிய முழு விபரத்தையும், போதிக்குங்கால் மாணவரிடையே சகஜமாக ஏற்படும் சந்தேகங்களை யும், கஷ்டங்களையும் முன்னதாகவே நன்கு யோசித்து, குறிப்பு எழுதி வைத்தல் சாலச் சிறந்ததாம் என்பது தேற்றம். இவ்வாறு எழுதி வைத்தலைத்தான் 'பாடக்குறிப்பு' என்று நாம் சொல்லுகிறோம். நல்ல தேர்ச்சி பெற்ற ஆசிரியராயினும் 'யானைக்கும் அடிசறுக்கும்' என்பது போல், வகுப்பறையில் சந்தேகங்களும், ஞாபக மறதியும், செய்யவேண் டியவை முன்னும் பின்னுமாகவும் வருவதற்கு ஏது உண்டாமாகையால் அன்னாரும் இவ்வனைத்தையும் நீக்கி, வெற்றிபெறப் பாடத்தை முடிக்க, பாடக் குறிப்பு எழுதுதல் அவசியம்.

பாடக் குறிப்பு பலவகையாக எழுதப்பட்டு வருகின்றது. ஒவ் வொரு ஆசிரியரும் தத்தமக்குத் தெரிந்த முறையில் எழுதுகிறார்கள். ஒவ்வொரு ஆசிரியரிடத்தும் பாடக்குறிப்பு இருத்தலை சகஜமாக நாம் காணலாம். ஆனால் அன்றாடம் நடத்தவேண்டிய விஷயங்களை நன்கு யோசித்து, வகுப்பிற்கு போவதன்முன் எழுதப்பட்டதா என்பது சிறிது சந்தேகந்தான். பாடக்குறிப்பு மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது சில சமயங்களில் வருஷக் கடைசியிலோ எழுதப் படுவதும் உண்டு. நடத்தவேண்டிய பாடங்களை நடத்தியபின்பு, பாடக் குறிப்பு எழுதுவதால் என்ன பயன்? யாருக்குப் புண்ணியம்? கல்வி யதிகாரிகளுக்குக் காட்டவேண்டுமே என்ற பயப்படும் மனப்பான்மை தான் இதற்குக் காரணமே யன்றி வேறல்ல. நான் கூறுவதெல்லாம் என்னுடைய பதின்மூன்று வருட அனுபவத்திலிருந்து கண்டறிந்த உண்மைகளே யன்றி வேறல்ல. இவ்விதக் குறைபாடுகளை நீக்கி, முழு வன்புடன் தங்கள் கடமைகளைச் செய்தலின் அவசியத்தைத் தான் கூற விரும்புகிறேன்.

இனி, பாடக்குறிப்பு எழுதுவதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களைக் கவனிப்போம். பாடத்தை நடத்துவதற்கு முன்பே

பாடக்குறிப்பு தயார் செய்துகொள்ள வேண்டுமென்பது மறுக்க முடியாததோர் உண்மை. எனவே இதனை முதலில் ஞாபகத்திலிறுத்த வேண்டும். பாடக் குறிப்பும் பாடத் திட்டமும் இணைக்கப்பட வேண்டும். பாடக் குறிப்பு மற்றொரு பாடப் புத்தகமாக ஆதல் கூடாது. விளக்கவேண்டிய முக்கியமான விஷயங்கள் மட்டுந்தான் பாடக்குறிப்பில் இடம் பெற வேண்டும். உதாரணமாக, தமிழ்ப் பாடமாயின், முக்கிய பதங்கள், எதிர்ப் பதங்கள், முக்கிய உபமான, உபமேயங்கள், ஒரே பொருள்கொண்ட பதங்கள், இலக்கண விளக்கம் ஆகியவை பாடக் குறிப்பில் விஷயம் என்ற கலத்தில் இடம்பெ'ற வேண்டும். பாட புத்தகத்திலுள்ள விஷயத்தை யொட்டிய இதர விஷயங்கள், வேறு புத்தகத்தில் இருந்தால் அவைகளையும் பாடக் குறிப்பில் தகுந்த இடத்தில் குறித்துக் கொள்வதுடன், அப்புத்தகத்தின் பெயரையும் குறித்தல் நலம்.

பாட புத்தகத்தில் வந்துள்ள விஷயத்தை ஒட்டிவரும் விஷயங்கள் கொண்டதும், பிள்ளைகள் எளிதில் படித்தறியக் கூடியதுமான, வேறு சுலபமான புத்தகங்கள் இருந்தால் அவைகளையும் குறித்தல் அவசியமாகும். பாடத்தை விளக்க உபயோகப்படுத்தவேண்டிய உபகரணங்கள், படங்கள், மாடல்கள் ஆகியவைகளும் பாடக் குறிப்பில் உரிய இடத்தில் குறிக்கப்பட வேண்டும். பிள்ளைகள் வியாசம் எழுதுவதற்கோ, அல்லது படம் போடுவதற்கோ, அல்லது பயிற்சி அப்பியாசங்கள் செய்வதற்கோ உரிய விஷயங்களையும் தகுந்த இடத்தில் குறிக்க வேண்டும். உபகரணங்கள், படங்கள் ஆகியவை ஆசிரியரால் செய்யப்பட்டவைகளா, அல்லது மாணவர்களால் ஆகியவைகளா என்பதையும் குறித்தல் நலம். சௌகர்யத்தை உத்தேசித்துக் கீழ்க்கண்ட கலங்களை வைத்துப் பாடக் குறிப்பு எழுதி வரலாம்.

1. வாரம். 2. பாடத்தின் பெயர்—விஷயம். (Topic of the lesson) 3. விஷயானுசந்தானத்திற்குரிய புத்தகங்கள். ஆசிரியருக்கு—மாணவருக்கு (Book of reference for teacher and pupil) 4. போதிக்க வேண்டிய விஷயங்களின் குறிப்பு - பாட புத்தகத்திலிருந்து. (Points stressed in the class in the lesson) 5. பாடத்திற்குச் சம்பந்தப்பட்ட அதிகப்படியான விஷயங்கள்—ஆசிரியர் கண்டறிந்தவை (Extra Points of the teacher's own) 6. உபகரணங்கள், சார்ட்டுகள், படங்கள், ஆல்பம் முதலியன. தமிழ்ப் பாடமாயின் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும் பயிற்சி அப்பியாசங்கள். (Practical expression Illustrations made by the teacher—made by the Pupil). 7. பாடம் நடந்த தேதி.

பாடக்குறிப்பு ஆசிரியரின் அருந்தோழன்.

'உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு'

என்பது இப்பாடக் குறிப்பிற்குச் சாலப் பொருந்தும்.

ஒரு முக்கிய விஷயம்—வகுப்பில் அடிக்கடி பாடக் குறிப்பைப் பார்த்துப் பார்த்துப் போதிப்பது கூடாது. அவ்வாறு செய்வதால் ஆசிரியரிடத்தில் மாணவர்களுக்கு உள்ள நன்மதிப்பு குறையத் தலைப்படும். அவசியமான சமயங்களில் மட்டும் பார்த்தும் பார்க்காதது போல் பாடப்புத்தகத்தில் கண்ணோட்டம் விட்டு, மறந்த விஷயங்களை அறிந்து போதிக்கவேண்டும். பாடக்குறிப்பில் ஒவ்வொரு பக்கத்திலும் சிறிது இடம் எழுதாமல் விட்டுவைத்தல் நலம். நாம் பத்திரிகைகள் படிக்கும்பொழுதோ, அல்லது வேறு இதர புத்தகங்கள் படிக்கும் பொழுதோ, நாம் நடத்திய பாடத்திற்குச் சம்பந்தமானதும் இனி நடத்தவேண்டிய பாடத்திற்குச் சம்பந்தமானதும் ஆகிய விஷயங்கள் வரலாம். அவைகளைக் காலியாக விட்டிருக்கும் இடத்தில் எழுதி வைத்துக்கொள்ளலாம். அதனாலாய பயன் பெரிதாம்.

ஒவ்வொரு பாடத்திற்கும் பாடக்குறிப்பு அவசியம். விளையாட்டு, சித்திரம், ஆகியவைகளுக்கும் பாடக்குறிப்பு அவசியமென்பதை மறத்தல் கூடாது.

**S. I. T. U PROTECTION FUND, Ltd.**

**520, High Road, Triplicane**

இந்த பண்டின் காரியாலயம் விழுப்புரத்திலிருந்து திருவல்லிக்கேணியில் சொந்த கட்டிடத்திற்கு திரும்பி வந்துவிட்டது.

V. ஸ்ரீனிவாசன்,
செக்ரிடரி,

8—6—'43

# 33-வது மாகாணக் கல்வி மகாநாடு, வேலூர்

## தீர்மானங்கள்

1. பிராவிடெண்டு பண்டு. (Provident fund.)

கணக்கைத் தீர்க்கும் காலத்தில் ஒரு ஆசிரியருடைய பிராவிடெண்டு பண்டுத் தொகையோடு சர்க்கார் அளிக்கும் தொகையை, $\frac{1}{8}$-லிருந்து $\frac{1}{2}$-ப் பங்காக உயர்த்தி யளிக்கும்படி சர்க்காரை இம் மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

2. உதவி யளிப்புச் சட்டம். (Grant-in-aid Code.)

ஆசிரியர்களுடைய உத்தியோக ஸ்திரத்தையும், பாடசாலையின் அபிவிருத்தியையும், ஸர்விஸ் நிபந்தனைகளையும் சீர்திருத்துவதின் நிமித்தம், உதவி யளிப்புச் சட்டத்தை மாற்றி யமைக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு வற்புறுத்துகிறது.

3. பாஷாப் பிரவீணர்கள். (Oriental Title Holders.)

ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள பாஷாப் பிரவீணர்களின் சம்பள திட்டத்தை ரூ. 45—2/ 2—75-லிருந்து ரூ. 45—5/ 2—75 என்று மாற்றி உத்தரவளிக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

4. பாட புத்தகங்கள். (Choice of Text-Books.)

பாட புத்தகங்கள் தேர்ந்தெடுப்பதை பாடசாலைத் தலைமையாசிரியர்களிடம் விட்டு விடும்படி சர்க்காருக்குச் சிபார்சு செய்கிறது.

5. பஞ்சப்படி. (Dearness allowance.)

சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும் திட்டத்திற்குக் குறையாமல் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஒவ்வொரு ஆசிரியருக்கும் பஞ்சப்படி கொடுத்துதவும்படி, ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிட்டிகள், மானேஜ் மெண்டுகள் இவர்களிடம் போதுமான தொகையைக் கொடுக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

6. பஞ்சாயத்து போர்டிலும், லேபர் டிபார்ட்மேண்டிலும் வேலை பார்ப்பவர்களுக்கும் பிராவிடெண்டு பண்டு உதவி. (Provident fund to Employees under Panchayat Boards and Labour Department.)

பஞ்சாயத்து போர்டிலும், லேபர் டிபார்ட்மெண்டிலும் உள்ள பாடசாலைகளில் வேலை பார்த்துவரும் ஆசிரியர்களுக்கு பிராவிடெண்டு பண்டு உதவியை அளிக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

7. ஆசிரியர் மானேஜர் ஒப்பந்தத்தை மாற்றி யமைக்க. **(Modifications of Contract-Appendix 28 M. E. R.)**

தென்னிந்திய ஆசிரிய சங்கம் யோசனை கூறியபடி, மானேஜ்மெண்டாருக்கும் ஆசிரியர்களுக்கும் உள்ள ஒப்பந்தத்தை உடனே திருத்தி யமைக்கும்படியும், குறைக்கக் கூடாத சம்பள திட்டத்தை சார்ஜண்டு கமிட்டியின் சிபார்சுகளோடு சேர்த்து உடனே ஆலோசிக்கும்படியும், இம் மகாநாடு சர்க்காரை வற்புறுத்துகிறது.

8. பள்ளிக்கூட கட்டிடங்களை திருப்பி யளித்தல். **(Return of School Buildings by military & A. R. P. authorities.)**

பாடசாலை வேலையை ஊக்கத்துடன் நடத்துவதற்காக, மிலிடெரி, ஏ. ஆர். பி. அதிகாரிகளால் எடுத்துக் கொள்ளப்பட்ட பாடசாலைக் கட்டிடங்களை, பாடசாலை அதிகாரிகளிடம் திருப்பிக் கொடுக்க உத்தரவளிக்கும்படி சர்க்காரை இம்மகாநாடு வேண்டிக் கொள்ளுகிறது.

புதிய பாடத் திட்டத்துக் கேற்ப இயற்றிய

**எமது புதிய புத்தகங்கள்**

**எமது தமிழ் புத்தகங்கள்**

**நமதுதாய்மொழி வாசகம்**

ஆசிரியர்

**N. பரமசிவ அய்யர், B.A., L.T.**

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் .... | அணா | 2½ |
| இரண்டாம் புத்தகம் .... | ,, | 3½ |
| மூன்றும் புத்தகம் .... | ,, | 4½ |
| நான்காம் புத்தகம் .... | ,, | 5 |
| ஐந்தாம் புத்தகம் .... | ,, | 6 |

**எமது கணித புத்தகங்கள்**

**புது முறை கணிதம்**

ஆசிரியர்

**M. S. சுந்தரேச்வரன், M.A., L.T.**

| | | |
|---|---|---|
| முதற் புத்தகம் .... (ஆறும் வகுப்பிற்குரியது) | அணா | 10 |
| இரண்டாம் புத்தகம் .... (ஏழாம் வகுப்பிற்குரியது) | ,, | 12 |
| மூன்றும் புத்தகம் .... (எட்டாம் வகுப்பிற்குரியது) | ,, | 12 |

**பி. ஜி. பால் அண்டு கம்பெனி,**

புத்தக வியாபாரிகள்,

**நெ. 4, பிரான்ஸிஸ்ஜோஸப்பு தெரு, சென்னை.**

# செய்தித் திரட்டு

## அக்பராபாத் பாடசாலை, அக்பராபாத், சென்னை,

7—6—43-ல் இப்பாடசாலை மானேஜர் ஸ்ரீ பி. டி. ராஜாசார் அவர்கள் பிரத்தியேக தெலுங்கு வகுப்பைத் திறந்து வைத்தார்.

## ஹிந்து ஆரம்ப பாடசாலை, பெரமண்டூர்

21—5—43-ல் பெற்றோர் சங்க ஆண்டு விழா கொண்டாடப் பட்டது. திண்டிவனம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ பக்தவத்சலு தலைமை வகித்தார். மாணவ மாணவிகள், சம்பாஷணைகளாலும் பாட்டுக்களாலும் எல்லாரையும் மகிழ்வித்தனர்.

## இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்

9—6—43-லிருந்து இப்பாடசாலை திறக்கப்படுகிறது. 700 சிறுவர் சிறுமியர் இலவசக் கல்வி பயில்கின்றனர். 14 வகையான தொழில்களில் மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. வழக்கம்போல் புது மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## உயர்தர ஆரம்ப பாடசாலை, குப்பானூர்

23—5—43-ல் ஸ்ரீ சின்னைய கவுடர் தலைமையில் பெற்றோர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது ஸ்ரீ. கே. எம். ராமசாமி கவுடர் பத்திரிகைகள் வாங்க ரூ. 35/- நன்கொடை யளித்தார். ஸ்ரீ. எம். கே. ரங்கே கவுடர் 'சங்கத்தின் நோக்கம்' என்பது பற்றியும், 'நாமும் யுத்தமும்' என்பது பற்றியும், சொற்பொழிவு செய்தார்.

## ஸ்ரீராமா பாடசாலை, கும்பகோணம்

15—5—43-ல் 11-வது வருஷாந்தரக் கொண்டாட்டமும், பெற்றோர் தினமும் கொண்டாடப்பட்டன. ரிடயர்டு உதவிப் பரிசோதகர் ஸ்ரீ நாராயணசாமி அய்யர் தலைமை வகித்தார். குழந்தைகள், ஆடல், பாடல், சம்பாஷணை முதலியவைகளைத் திறம்படக் காட்டி மகிழ்வித்தனர். பல பிரபலஸ்தர்கள் பேசினார்கள். குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன.

## போர்டு முஸ்லீம் ஆண் பாடசாலை, மேலத் திருப்பூந்துருத்தி

16—5—43-ல் பெற்றோர் சங்க ஆண்டு விழா, திருக்காட்டுப்பள்ளி சப் ரிஜிஸ்தரார் ஸ்ரீ. சோமசுந்தரம் பிள்ளை தலைமையில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. துரைசாமி முதலியார் 'பிள்ளைகளின் நலமும் பெற்றோர்களின்

மனமும்' என்பது பற்றி பெற்றோர் மனம் உருகும் வண்ணம் சொற்பொழிவு செய்தார். மாணவ மாணவிகள், தீண்டாமை, பெற்றோர் கடன், பெண் கல்வி முதலிய விஷயங்களைப் பற்றி சொல்லாடல் நடத்தினார்கள். தலைவர் அவர்கள் ஆசிரியர்களுடைய விடாமுயற்சியைப்பற்றிப் புகழ்ந்து பேசினார். இரவில் 'ராஜ்ய ஸ்ரீயின் விடுதலை' என்னும் நாடகம் நடைபெற்றது.

---

## பஞ்சாயத்து ஆரம்ப பாடசாலை, விஷ்ணுபுரம்

15—5—43-ல் நன்னிலம் சீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ. வாசுதேவய்யர் தலைமையில், பாடசாலையின் எட்டாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. காலையில் பந்தய விளையாட்டுகள் நடைபெற்றன. மாலையில் மாணவ மாணவிகள் கும்மி, கோலாட்டம் முதலியவைகளால் எல்லாரையும் மகிழ்வித்தனர். பந்தயங்களில் செயித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பிறகு, தலைவரும் அவரை யொட்டி சில உயர்தரப்பள்ளி ஆசிரியர்களும், 'ஆரம்பக் கல்வியும் அதன் அவசியமும்' என்பது புற்றி சொற்பொழிவு செய்தார்கள். இரவில் 'பக்த துருவன்' என்னும் நாடகம் மாணவ மாணவிகளால் விமரிசையாக நடிக்கப்பட்டது.

---

## எயிடெட் எலிமெண்டரி பாடசாலை, சூளேஸ்வரம்பட்டி.

9—6—43-ல் பள்ளிக்கூட வருடாந்திரக் கொண்டாட்டமும், பெற்றோர் சங்கம் 3-வது ஆண்டு விழாவும், ஸினியர் டிப்டி இன்ஸ்பெக்டர், ஸ்ரீ. P. K. சீனிவாசய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டன. அது சமயம், ஸ்ரீ. S. ராஜம் (P. A. to D. E. O.) அவர்கள், கல்வியும் வாழ்க்கையும் என்பதுபற்றி நீண்டதோர் சொற்பொழிவு செய்தார். சுமார், 500 பெற்றோர்களும் பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தார்கள். மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டமும், பெண் கல்வி அவசியம் என்பதையும் புதுமுறை பூகோள பாட சம்பந்தமான சம்பாஷணைகளையும் நடத்தி வந்திருந்தவர்களை மகிழ்வித்தனர்.

---

## முகம்மதிய பாடசாலை, உமர் ஆபாத்

13—6—43-ல் முஹம்மதிய பாடசாலையின் மானேஜர் ஜனாப் சௌகார் K. ஹாஜி மஹம்மத் இஸ்ஹாக் சாஹிப் அவர்கள் தலைமையில் பெற்றோர் சங்கம் நடைபெற்றது. அச்சமயம் ஷை பாடசாலையில் E. S. L. C. பரீக்ஷைக்குச் சென்ற 5 மாணாக்கர்களில் 4 பேர் தேறியதைக் குறித்து சந்தோஷித்து ஆசிரியர்களின் ஊக்கத்தையும் உழைப்பையும், 'மதரஸாயே கிஸ்வான்' பெண்பாடசாலைக்கு சர்க்காரிட் அங்கீகாரம் கிடைத்ததைப் பற்றியும், பாராட்டிப் பேசினார்கள்.

## வெங்கட்ராமா அண்டு கம்பெனி

பிரசுரகர்த்தர்கள் :: எஸ்பிளனேட், மதருஸ்

கீழ்க்கண்ட புத்தகங்கள் எல்லாம் சென்னை துரைத்தனத்தாரால் பாட புத்தகங்களாக அங்கீகரிக்கப்பட்டவை.

1. தமிழ் சுடர் வாசகம்
   S. G. கணபதி அய்யர், B.O.L,
   Miss M. மாசிலாமணி அம்மையார் M.A., L.T.
   I முதல் VIII வகுப்பு வரை

2. ஆரம்ப கணிதம்
   M. சோமசுந்தரம், B.A., L.T.
   III முதல் V வகுப்பு வரை

3. இயற்கைப் பாடமும், தோட்ட வேலையும்
   S. V. தர்மராஜசிவா
   IV & V வகுப்புகளுக்கு

4. இந்துதேச சரித்திரம்
   P. சுப்பையா
   IV முதல் V வகுப்பு வரை

5. இந்துதேச சரித்திரம்
   D. வெங்கிடராமன்
   VI முதல் VIII வகுப்பு வரை

6. பாலர் கை வேலை
   D. K. நந்திகேசுவரன்
   III முதல் V வகுப்பு வரை

7. தமிழ் மொழிப் பயிற்சிகள்
   III முதல் V வகுப்பு வரை

8. தமிழ் நீதி கதா வாசகம்
   P. K. ஸ்ரீனிவாஸாச்சாரியர்
   I முதல் V வகுப்பு வரை

9. ஆரம்ப ஆசிரியர் உதவி புத்தகங்கள்
   I முதல் V வகுப்பு வரை

10. தமிழ்ச் சிறுவர் இலக்கணம்
   V வகுப்பு

இக் காகித பஞ்ச காலத்திலும் நாங்கள் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான அளவுக்கு எல்லா புத்தகங்களையும் தயாரித்து வைத்திருக்கிறோம். தங்களுக்குத் தேவையான புத்தகங்களை சப்ளை செய்ய தயாராக இருக்கிறோம். சீசன் காலத்தில் ஆர்டர்கள் தாமதமாகாமலிருப்பதற்காக தங்களுடைய ஆர்டரை முன் கூட்டியே அனுப்பக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாணவர்களே! வாலிபர்களே !!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

## சுவாமி விவேகாநந்தர்

### ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம் | | | விலை | 0—12—0 |
| ,, | ,, | கடிதங்கள் | ,, | 0—10—0 |
| ,, | ,, | நமது தாய் நாடு | ,, | 0— 8—0 |
| ,, | ,, | சுவாமிகள் | ,, | 0— 3—0 |
| ,, | ,, | எனது குருநாதர் | ,, | 0— 3—0 |

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

**ஸ்ரீ ராமகிருஷ்ண மடம்,** மயிலாப்பூர், சென்னை.

# பத்திராதிபர் குறிப்பு

## குறைக்கக் கூடாத சம்பள திட்டமும், பஞ்சப்படியும்

சென்ற மே மாதத்தில் வேலூரில் நடந்த கல்வி மகாநாட்டில் சம்பளத் திட்டத்தைப் பற்றியும், பஞ்சப்படியைப்பற்றியும் சில முக்கிய மான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளம் மிகவும் குறைவானதென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். 1937 ஜூன் மாதத்தில் விடுத்துள்ள அறிக்கையில் சர்க்காரும் கூட எழுதியுள்ளதாவது.—"தகுந்த படிப்பும் பயிற்சியும் பெற்ற ஆசிரியர் ஒருவர், தன்னுடைய உத்தியோக நிபந்தனைகள் அதிருப்திகரமாயும், தன் சம்பளம் மிகக் குறைவாயும் ஒழுங்காகக் கொடுபடாமலும், தன் அந்தஸ்து கௌரவிக்கப்படாமலும் இருந்தால் அவரிடமிருந்து நல்ல வேலையை எதிர்பார்க்க முடியாது என்பதை சர்க்கார் அறிந்துள்ளார் கள்." என்பதுதான். கல்வி இலாகா அதிகாரிகள் மானேஜ்மெண்டாரை ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒழுங்காகச் சம்பளத்தைக் கொடுத்துதவுமாறு வற்புறுத்துவதில் நாம் நன்றி செலுத்துவதுடன், ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள திட்டத்தைச் சீர்திருத்த இதுவரை சர்க்கார் முன் வராததற்கு மிகவும் வருந்துகிறோம். மேலே குறிப்பிட்ட சர்க்கார் அறிக்கை விடுத்து சுமார் ஏழு வருஷங்களாகியும், உபயோகமான நடவடிக்கை எதுவும் இன்னும் செய்யவில்லை.

மத்திய கல்வி யோசனைக் கமிட்டியாரால் ஏற்படுத்தப்பட்ட சார்ஜண்ட் கமிட்டி ஆசிரியர்களின் சம்பளத்திட்டம், நிபந்தனைகள், முதலியவைகளைப்பற்றித் திருப்திகரமான சிபார்சுகளைச் செய்துள்ளார் கள். பிரைமரி ஸ்கூலிலுள்ள ஆசிரியர்களுக்குக் குறைந்த பக்ஷம் ரூ. 30-3-50 சம்பள திட்டம் இருக்கவேண்டுமென்றும், கிராமப் பள்ளிக்கூடத்திலுள்ளவர்களுக்கு வீடு இலவசமாகவோ அல்லது 10 சத வீதம் வீட்டு வாடகையோ அளிக்கவேண்டுமென்றும், அதிகச் செலவு ஏற்படும் பிராந்தியங்களில் 50 சத வீதம் வரை உயர்த்திக் கொடுக்கவும், நகரங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு ரூ. 45 முதல் 75 வரை கொடுக்க வும், சிபார்சு செய்திருக்கிறார்கள். இப்பொழுது செகண்டரி கிரேடு ஆசிரியர் ரூ. 18 சம்பளம் பெறுகிறார். ஏனென்றால் கிராண்டுத்தொகை அவ்வளவுதான் சர்க்காரால் மதிக்கப்பட்டிருக்கிறது.

வேலூர் ஜில்லா ஜட்ஜ் மிஸ்டர் ஏ. எஸ். பி. ஐயர் ஆரம்ப ஆசிரி யர்களின் நிலைமையைப்பற்றி மிகவும் பரிதாபகரமாகக் கூறியதாவது:— "ஆசிரியரின் குடும்ப அபிவிருத்திக்குத் தக்கபடி அவருடைய சம்பளமும் போதுமானபடி விருத்தியடைய வேண்டும். உலகம் பூராவும் ஆசிரியர் கள், அதிலும் இந்தியாவில் ஆசிரியர் வர்க்கத்தில் அதிகமாயுள்ள ஆரம்ப ஆசிரியர்கள், மிகவும் கேவலமான சம்பளம் கொடுக்கப்படு கிறார்கள். மாதம் ரூ. 16-8-0 சம்பளம் பெறும் ஆசிரியன் ஒருவன், சம்சாரம், 9 குழந்தைகள், விதவையான தாயார் உள்ள தன் குடும்

பத்தைச் சமாளிக்க முடியாமல், கோடை விடுமுறையில் சினிமாவில் ரூ. 100 பெறுவதற்காக, கோபத்தால் பெண்சாதி தன் புருஷனை துடைப்பத்தால் அடிக்கப்படும் அங்கத்தை ஏற்றுக்கொண்டான். ஏன் இவ்வளவு கேவலமான அங்கத்தை ஏற்றுக்கொண்டாய் என்று கேட்டதற்கு அவன் தினம் வயிற்றுக்கு அந்த அடிபடாத பாடுபடுவதாகவும், தன் குடும்பத்திற்கு முக்கியத் தேவையான சாமான்களை வாங்குவதற்குக்கூட தன் சம்பளம் போதவில்லை என்றும், அதைவிட அந்த அடியை ஏற்றுக்கொண்டு வீட்டுக்கு வேண்டிய சாமக்கிரியைகள் சகலத்தையும் வாங்கிக் கொள்வதோடு, இப்பொழுது சாப்பிட்டுக் கொண்டிருக்கும் ஐஸ்கிரீம் போலொத்த இன்பத்தையும் அடைய முடிந்தது. மேலும் அவன் சொன்னதாவது :—தன் மனைவியை தன்னை அடிக்கும் பெண் பார்ட்டை எடுத்துக் கொள்ள சம்மதமா என்று கேட்டதற்கு முதலில் அவள் இஷ்டப்படவில்லை. ஆனால் நான் வேறொரு பெண்ணால் துடைப்ப அடிபடுவதைவிட இதைக் குறைவாகவே எண்ணுவேன் என்றதின் பேரில் அவள் சம்மதித்தாள்.

"சோல்ஜர்களுக்குச் செலவு செய்வதைப்போல் ஆசிரியர்களுக்கும் அவ்வளவு செலவு செய்யவேண்டும்."

* * * *

உணவுப் பொருள்கள் விலை அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கின்றன. அதேபோல் துணிகள் விலையும் இருக்கின்றன. சர்க்கார் சிப்பந்திகளுக்கு பஞ்சப்படியை உயர்த்த உத்தேசித்திருக்கிறார்கள். ஆசிரியர்களையும் சர்க்கார் சிப்பந்திகளைப்போலவே அவசியமான உத்தியோகஸ்தர்கள் என்ற முறையில் கருதும்படி விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மிகவும் அல்பமான ரூ. 2/- ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளித்ததைத் தவிர வேறு ஒன்றும் செய்யவில்லை. சர்க்கார் சிப்பந்திகளுக்குக் கொடுப்பதுடன் இதை ஒத்திட்டுப் பார்த்தால் எவ்வளவு தாழ்மையாய் இருக்கிறது! இக்கஷ்ட காலத்தில் உதவி புரிய சர்க்கார் முன் வரவேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள், முனிசிபாலிட்டிகள், உதவிபெறும் பாடசாலை மானேஜ்மெண்டுகள், இவர்களிடம், ஆசிரியர்களுக்குச் சர்க்கார் சிப்பந்திகளைப்போல் பஞ்சப்படி அளிக்கும்படியான தொகையைக் கொடுத்துதவும்படி சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறோம். தற்காலம் சும்மா இருப்பதுபோல் இராமல், ஆசிரியர்களுக்குத்தகுந்த உதவி புரிய சர்க்கார் முன் வருவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

---

**S. I. T. U. Protection Fund Ltd.,**

ஆக்சுவரியின் ரிபோர்ட்டுகளை சர்க்கார் ஒப்புக்கொண்டுவிட்டார்கள். ஆகையால், ஆக்சுவரியின் சிபார்சின்படி போனஸ் ஸர்ட்டிபிகேட்டுகள் மெம்பர்களுக்கு அனுப்பப்படும். தென்னிந்திய ஆசிரியர்கள் அனைவரும் இந்நிதியில் தாமதிக்காமல் சேருவார்கள் என்று நம்புகிறோம்.

---

# S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

520, High Road, Triplicane, Madras.

## நீங்கள்

## இந்த நிதியில்

## சேர்ந்து விட்டீர்களா?

| | | | |
|---|---|---|---|
| தற்கால கையிருப்பு | ... | ... | ரூ. 2,47,115 |
| பாலிஸிக்கள் | ... | ... | 1,371 |
| யூனிட்டுகள் | ... | ... | 2,585 |

ஆக்சுவரியின் பரிசோதனையில்,
நல்ல லாபம் காணப்படுகிறது!

**ரூபாய்க்கு 2 அணா விதம் போனஸ்**

கொடுக்கலாமென்று அபிப்ராயப்படுகிறார்.

**உடனே சேருங்கள்!**

வி. ஸ்ரீநிவாஸன், காரியதரிசி.


Regd. No. M. 3473


இந்திய தேயிலையின் அபிவிர்த்தி

# பத்துலக்ஷம ஏககரில் பத்துலக்ஷம பேர்



பத்து லக்ஷம் ஏக்கரில் பத்து லக்ஷம் பேர்! பெரியதொரு இந்தத் தொழிலாளர் சேனை இந்தியாவில் ஐயாயிரம் தேயிலைத் தோட்டங்களில் உழைக்கின்றன. அங்கே ஜாதி மத பேதம் இல்லாமல் மனதில் திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டு அவர்கள் உழைத்து வருகிறார்கள். இந்தியத் தேயிலைப் பானத்தை அருந்தி அதன் மூலம் இந்தியத் தொழிலாளியின் உழைப்பின் பயனைப் பெறுங்கள். அதுவே உலகத்தின் உன்னத பானம்.



இந்த விளம்பரத்தைக் கத்தரித்து எடுத்து உங்களுடைய பெயர் விலாசம் தொழில் முதலிய விபரங்களுடன் அனுப்புங்கள் விலாசம் இந்தியத் தேயிலைக் கமிஷனர், இந்தியத் தேயிலை மார்க்கெட்டு விஸ்தரிப்பு போர்டு தபால்பெட்டி நெ. 2172, கல்கத்தா. மேற்கண்ட விலாசத்துக்கு அனுப்பினால், "தி மார்ச் ஆப் இந்தியன் டீ" என்ற புத்தகம் உங்களுக்கு இலவசமாக அனுப்பப்படும். அது தேயிலைத் தொழிலைப்பற்றியும் அது எவ்வளவு உன்னதமான பானம் என்பதைப்பற்றியும் வர்ணிக்கும் புத்தகம்.

# இந்தியன் டீ

உலகத்தின் உன்னத பானம

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK-190


Printed by K. Sadagopachariar at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by Mr. M. S Sabhesan, M.A., for "The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.